

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும்
இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# தியாகராசா இராசேஸ்வரி

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

27.08.2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



மண்ணில்
10.03.1913

விண்ணில்
11.08.2007

அமரர்

# தியாகராசா இராசேஸ்வரி

அவர்கள்

திதி நிர்ணயப் பாடல்

சர்வசித்து வருட சனித்திங்கள் பதினொன்றுதனில்
பூர்வபட்ச திரியோதசி திதிதனில் நிறைமகளாம்
இராசேஸ்வரி இவ்வுலக வாழ்வதனை நீத்து
பெற்றனளே தேவோன்னத முத்திப்பேறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

திருவாக்கும் செய்கருமம் கை கூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம்கை.

## தேவாரம்

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால்வந் துதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லாநிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடுபொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப்பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய்கேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

தாயாய் முலையைத் தருவானே
தாரா தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
நம்பிஇனித்தான் நல்குதியே
தாயே என்றுன் தாளடைந்தேன்
தயா நஎன்பால் இல்லையே
நாயேன் அடிமை உடனாக
ஆண்டாய் நான்தான் வேண்டாவோ.

## திருவிசைப்பா

இவ்அரும் பிறவிப் பௌவந்நீர் நீர்த்தும்
ஏழையேற் கென்னுடன் பிறந்த
ஐவரும் பகையே ஆர்துணை என்பால்
அஞ்சல்என் றருள்செய்வான் கோவில்
கைவரும் பழனம் குழைத்தசெஞ் சாலிக்
கடைசியர் களைதரு நீலம்
செய்வரம் பரும்பும் பெரும்பற்றப் புலியூர்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

## திருப்பல்லாண்டு

சீருந்திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும்பெறாத அறிவு
பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊருமுலகுங் கழற
உளறியுமை மணவாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்து வெண் ணீற்றொளி போற்றிநின்
றாதி யாரரு ளாதலின் அஞ்செழுத்
தோதி ஏற்றினார் உய்ய உலகெலாம்.

## திருப்புகழ்

காலனிடத் தணுகாதே காசினியிற் பிறவாதே
சுலஅகத் தியஞான தேனமுதைத் தருவாயே
மாலயனுக் கரியானே மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளோனே நாககிரிப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர். திருமதி. தியாகராசா இராசேஸ்வரி அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் நல்முத்தாய் விளங்குவது ஈழத்திருநாடு. ஈழத்திருநாட்டின் சிகரமாகவும், எழில் ஓவியமாகவும் பிரகாசித்திருப்பது யாழ்ப்பாணம். இந்த யாழ்ப்பாணத்தில் தென்னையும், மாவும், செந்நெற் கழனிகளும், கனிதருவாழைகளும் பொலிந்திருக்க, தெய்வத்திருத்தலங்கள் சூழ்ந்திருக்க, கல்விமான்களும், தொழில்வல்லுனர்களும், பாவலரும், கலைஞர்களும் சிறந்துவிளங்க தலைநிமிர்ந்து நிற்பது அளவையம்பதி. இந்த அளவையம்பதியிற் கூத்தஞ்சிமா எனும் கிராமத்தில் இசைவேளாளர் மரபின் தோன்றல்களான வடிவேலு நாகம்மா தம்பதிகளின் சற்புத்திரியாக அமரர் இராசேஸ்வரி அவர்கள் 1913ஆம் ஆண்டு பங்குனி மாதம் 10 ஆம் திகதி இவ் அவனியில் அவதரித்தார். இவரது உடன் பிறப்புக்களாக அமரர் நடராஜா (கணக்காய்வாளர்- ஹற்றன்), அமரர் மாரியம்மா, அமரர் தையலாம்பாள், வேலம்மா, ஆகியோர் வாய்க்கப்பெற்றனர். அன்னாரது தாய்மாமன்களாக அமரர் வேலாயுதம், குமாரசுவாமி (வைத்தியர்) அமரர் சிவானந்தம் ஆகியோர் விளங்கினர். அமரர் ஞானாம்பாள், அமரர் சுந்தரம், அமரர் யோகாம்பாள் அன்னாரது சிற்றன்னைகளாவர். அமரர் அமிர்தலிங்கம், அமரர் இரத்தினவேலு, அமரர் சண்முகசுவாமி, அமரர் நகுலாம்பாள், பாலாம்பிகை, அமரர் கணேசரத்தினம், சண்முகநாதன், அமரர் இராசாம்பாள், அமரர் மங்களாம்பாள், அமரர் குமாரசுந்தரம், அமரர் திருநாதவூரன், அமரர் அம்பிகை, இராசமணி, அமரர் தர்மவதி ஆகியோர் இவரது நெருங்கிய உறவினர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தனது கல்வியை அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாசாலையிற் பயின்றார். பின் அக்கால மரபுப்படி பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தி, இணுவிலைச் சேர்ந்த அமரர்களான இரத்தினம் - பொன்னம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வனான, ஸ்ரீமான் தியாகராசாவுடன் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார். புகுந்த வீட்டில் தனது மூத்த மைத்துனராகிய அமரர் சோமசுந்தரம் அவர்களின் அன்புத் துணைவியாராகிய கௌரியம்மாவுடன் இணைந்து, அக்கால கூட்டுக்குடும்ப வாழ்க்கை அமைப்பில் தனது மாமனார், மைத்துனர்களை அரவனைத்து, அவர்களது நலன்பேணி, மைத்துனர்கள் இல்லறவாழ்வில் இணையும்வரை பெற்றதாய் போல் அரவணைத்தார். தனது மைத்துனர்களான அமரர் சோமசுந்தரம், அமரர் கனகசபாபதி, திரு. சொர்ணலிங்கம் (அவுஸ்திரேலியா), அமரர் பஞ்சநாதம், அமரர் சண்முகராசா அமரர் தட்சணாமூர்த்தி ஆகியோரால் "பெரியண்ணி" என அன்பாகவும், பாசமாகவும் அழைக்கப்பட்டார். தனது புகுந்தவீட்டிற்கு வந்த சகோதரிகளான, கௌரியம்மா, சீதாலட்சுமி, புவனேஸ்வரி, சரஸ்வதி, இராசேஸ்வரி ஆகியோரால் "அக்கா" என அன்பாக அழைக்கப்பட்டார். அக்காலத்திற் தனது மைத்துனராகிய, சொர்ணலிங்கம் அவர்கள் கல்வியிற் சிறந்து விளங்கியதால் தனது தமையனாருடன் ஹற்றனுக்கு அனுப்பிவைத்து அவரது உயர்வில் பெரும் பங்காற்றினார்.

தனது இல்லறவாழ்வின் நற்பயனாக Dr.சிவபாதசுந்தரம் (R.M.O. (கொழும்பு) விக்னேஸ்வரி ஈஸ்வரபாதம் (மின் பொறியியலாளர் - CEB திருகோணமலை), குஞ்சிதபாதம் (கணக்காய்வாளர்) நகுலேஸ்வரி ஆகிய செல்வங்களை ஈன்றெடுத்து, அவர்களைக் கல்வி கேள்விகளிற் சிறந்துவிளங்கச் செய்தார். தனது குடும்பத்தின் ஒவ்வொரு செயற்பாட்டிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றதுணைவியாக விருந்து, குடும்பத்தை வளப்படுத்தினார். தனது பிள்ளைகளின் கல்விவளர்ச்சியில் அதிதீவிர பங்கெடுத்து செயற்பட்டார். தனது பிள்ளைகள் கல்வீட்டில் வசிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு தனது சேமிப்புப் பழக்கத்தினால் சிறுகச்சிறுக சேமித்த பணத்தினை கணவனுக்கு வழங்கி தனது ஆசையை நிறைவேற்றிக் கொண்டார். இவ்வாறு சந்தோசமாக வாழ்ந்து வரும் காலத்தில் கணவரது 71ஆவது வயதில் அவரை இழந்து தவித்து நின்றார். பின்னர் ஒருவாறு மனந்தேறிப் பிள்ளைகளின் வாழ்வை மேம்படுத்த அயராது பாடுபட்டார்.

அன்னாரின் மூத்த புதல்வன் சிறந்த முறையிற் கல்வி கற்று மருத்துவராக (R.M.O) மருத்துவசேவையில் இணைந்து கொண்டார். திருமணவயதில்பதுளையைச் சேர்ந்த தங்கம் பேனாட் வர்க்கீஸ் என்பவரை திருமணம் செய்து கொண்டார். இதன் பயனாக சிவசுவர்ணபூரணி(ஆசிரியை அல்னஸர் முஸ்லீம் வித்தியாலயம் கொழும்பு) சிவசங்கர் (ஆசிரியர் மாலைதீவு ஆங்கிலப் பாடசாலை - மாலைதீவு), தயாளினி (ஆசிரியயை மெதடிஸ் கல்லூரி கொழும்பு), துஷித்தா (தாதிய உத்தியோகத்தர் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலை கொழும்பு), உமா, சேந்தன் (விற்பனை ஆய்வாளர் - கட்டார்) ஆகிய பேரப்பிள்ளைகளைப் பெற்று அமரர் அகமகிழ்ந் திருந்தார்.

தனது மூத்த புதல்வியான விக்னேஸ்வரியை இணுவில் கந்தசுவாமி கோவிலடியைச் சேர்ந்த குழந்தைவேலு தம்பதிகளின் புதல்வனான சண்முகானந்தனுக்கு (ஓய்வுபெற்ற நீதிமன்றலிகிதர்) மணம்செய்து கொடுத்து அதன் பயனாக சவிதா, அருணா (தாதிய உத்தியோகத்தர் - யாழ் போதனா வைத்தியசாலை, மீனா (ஆசிரியை- யாழ்ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) எனும் பேரப்பிள்ளைகளை கண்டு மகிழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது புதல்வனாகிய ஈஸ்வரபாதம் என்பவரை உயர்கல்வி பெறச்செய்து மின்பொறியியலாளராக (இலங்கை மின்சார சபை) அரச சேவையில் இணையச்செய்தார். இவரை சாவகச்சேரியைச் சேர்ந்த பஞ்சாபிகேசன் தம்பதிகளின் புதல்வியாகிய சுமங்கலாவை மணம் புரிந்து வைத்து அதன்பயனாக சுதர்சன் (கணனிப் பொறியலாளர் அவுஸ்திரேலியா), இளங்கோ (கனடா), ஆதவன் (மாணவன் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி) ஆகிய பேரன்களைப் பெற்று மகிழ்ந்தார். தனது இளைய புதல்வன் குஞ்சிதபாதத்தை உயர்கல்வி பெறச்செய்து கணக்காய்வாளராக்கி அவரை யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த சண்முகசுந்தரம் தம்பதிகளின் புதல்வி வசந்தி (ஆசிரியை-யாழ் வேம்படி மகளிர் கல்லூரி) அவர்களுக்கு மணம் புரிந்து வைத்தார். அதன் பயனாக கௌதமன் (மாணவன் யாழ் பல்கலைக்கழகம்), ராஜாதித்தன் (சவுதிஅரேபியா), சாண்டில்யன், வைஷ்ணவி (மாணவி - யாழ்வேம்படி மகளிர் கல்லூரி) ஆகிய பேரப்பிள்ளைகப் பெற்று அமரர் மனம் மகிழ்ந்திருந்தார். இளைய புதல்வி நகுலேஸ்வரியை அளவெட்டியைச் சேர்ந்த முருகையா தம்பதிகளின் மூத்த புதல்வன் நாதமணி என்பவருக்கு மணம் செய்து வைத்ததன் பயனாக நாதப்பிரியா (கனடா) தமிழ்ப்பிரியா, சண்முகப்பிரியா (மாணவி, உயர் தொழில்நுட்பக் கல்லூரி), பிரபு ஆகிய பேரப்பிள்ளைகளைப் பெற்று சந்தோசமாக வாழ்ந்துவரும் காலத்தில் இடிவீழ்ந்ததைப் போல், அவரது இளைய புதல்வி நகுலேஸ்வரியின் கணவர் நாதமணி பிரான்சில் திடீரென மரணமான செய்தி கேட்டு மனம் துடித்தார். பின்னர் அம்மகளின் மனதிற்கு ஆறுதலாகவும், பேரப்பிள்ளைகளை அரவணைத்து ஆறுதலளித்து தனது இறுதிநாள் வரை அவர்களுடன் இருந்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளைகளான சிவசுவர்ணபூரணி, ராதீஸ் நிலாந்தையும், சிவசங்கர் பிரபாவதியையும், தயாளினி மார்க்கத்தையும், உமாசத்தியேந்திராவையும், நாதப்பிரியா, ஸ்ரீ தயாளையும் மணம் முடித்ததன் வாயிலாக, வித்யாதரன் (கொழும்பு) பிருதுவிகாஷ் (கொழும்பு), பவதாரணி( கொழும்பு) துவாரகன், (கொழும்பு), டர்மிசன் (கொழும்பு), திவ்யாசாகர் (கொழும்பு), மதுமிதன் (கொழும்பு), அபராஜிதன் (கொழும்பு), விதுஷன் (கொழும்பு), விதுஷா (கொழும்பு), நிருசா (கனடா), டினோஷா (கனடா) ஆகியோரைப் பூட்டப்பிள்ளைகளாகப் பெற்று இன்புற்று வாழ்ந்து வந்தார்.

தனது குடும்பப் பொறுப்புக்களையெல்லாம் நிறைவேற்றிய பின்னர், தனது பிள்ளைகளை, பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் நல்லதொரு நிலையில் வாழ்வதைக் கண்டு மகிழ்ந்த அமரர் இராசேஸ்வரி அவர்கள் தனது உற்றார் உறவினர்களுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தார். நல்லதொரு குடும்பத்தலைவியாக, பாசமிகு தாயாக, அரவணைக்கும் அம்மம்மாவாக, பாட்டியாக, பூட்டியாக வாழ்ந்த அமரர் இராசேஸ்வரி 11.08.2007 சனிக்கிழமை தனது தொண்ணூற்று நான்காவது அகவையில் இறைவனின் பாதார விந்தங்களை அடைந்தார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய நாம் எல்லோரும் பிரார்த்திப்போமாக!

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசி முனிவர் அருளிச் செய்த

# விநாயகர் கவசம்

திருச்சிற்றம்பலம்

வளர்ச்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க; வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசௌந் தரதேக
மகோற்கடர் தாம் அமர்ந்து காக்க;
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
சிபர்காக்க; புருவந் தம்மைத்
தளர்வில்மகோ தரர்காக்க; தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க;

கவின் வளரும் அதரங்கச முகர்காக்க;
தால் அங்கணக் கிரீடர் காக்க;
நவில்சிபுகம் கிரிசைசுதர் காக்க; நனி
வாக்கைவிநா யகர்தாம் காக்க;
அவிர்நகைதுன் முகர்காக்க அள் எழிற்செஞ்
செவிபாச பாணி காக்க;
தவிர்தலுறா திளங்கொடி போல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க;

காமருபூ முகந் தன்னைக் குணேசர்நனி
காக்க; களம் கணேசர் காக்க;
வாமமுறு இருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தாம் மகிழ்ந்து காக்க;
ஏமமுறு மணிமுலைவிக் கினவிநா
சன்காக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க; அகட்
டினைத்துலங்கு ஏரம்பர் காக்க;
பக்கமிரண் டையுந்தரா தரர் காக்க;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினகரன் காக்க; விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாம் காக்க;
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்க; சகனத்தை அல்லல்
உக்ககண பன்காக்க; ஊருவைமங்
களமூர்த்தி உவந்து காக்க;

தாமுழந்தாள் மகாபுத்தி காக்க; இரு
பதம்ஏக தந்தர் காக்க;
வாழ்கரம்கிப் பிரப்பிரசா தனர்காக்க;
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச் செய் ஆசாபூ ரகர்காக்க
விரல்பதும அத்தர் காக்க;
கேழ்கிளரும் நகங்கள்விநா யகர்காக்க;
கிழக்கினிற்புத் தீசர் காக்க;

அக்கினியிற் சித்தீசர் காக்க; உமா
புத்திரர்தென் திசை காக்க;
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க;
விக்கினவர்த் தனர்மேற்கென்னுந்
திக்கதனிற் காக்க; வாயுவிற்கசகன்
னர்காக்க; திகழு தீசி
தக்கநிதி பன்காக்க; வடகிழக்கில்
ஈசநந் தனரே காக்க;

ஏகதந்தர் பகல்முழுதுங் காக்க; இர
வினுஞ்சந்தி இரண்டன் மாட்டும்
ஓசையின்விக் கினகிருது காக்க; இராக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதர்பூதம் உறுவே தாளம்
மோனியையபேய் இவையாதி உயிர்த்திறத்தால்
வருந்துயரும் முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க;

மதிஞானம் தவம்தானம் மானம்ஒளி
புகழ்குலம்வண் சரீரம் முற்றும்
பதிவான தனம்தானி யம்கிருகம்
மனைவிமைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க;
காமர்பவுத் திரர்முன் னான
விதியாகும்சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க;

வென்றிசீ விதங்கபிலர் காக்க; கரி
யாதியெலாம் விகடர் காக்க;
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடின்நும்பால் இடையூறு றொன்றும்
ஒன்றுறா, முனிவர்கள் ! அறிமின்கள்
யாரொருவர் ஓதினாலும்
மன்றஆங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும்.
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கந்தர் சஷ்டி கவசம்



## காப்பு

**அமரர் இடர்தீர அமரம் புரிந்த**
**குமரன் அடி நெஞ்சே குறி**

**நேரிசை வெண்பா**

**துதிப்போர்க்கு வல்வினைபோம்**
**துன்பம் போம் நெஞ்சிற் பதிப்போர்க்குச் செல்வம்**
**பலித்துக் – கதித்(து) ஓங்கும் நிட்டையுங் கைகூடும்,**
**நிமலர் அருள்கந்தர் சஷ்டி கவசந்தனை.**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக! வருக! மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன் வருக!
ஆறுமுகம் படைத்த ஐயா வருக!
நீறிடும் வேலவன் நித்தம் வருக!
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக!
சரவண பவனார் சடுதியில் வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணப சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசரஹணப வருக! வருக!
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக!
என்னை யாளுமிளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக!
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளியையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக!
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகெண
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்திருபல் முனைவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத் தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லபூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக்காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒரு வழிப் போக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒரு தலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடைவாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோடநீ யெனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா
கதிர் காமத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல் வராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா விருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தைமுருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடனிரக்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியென் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென்மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயல தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் மீரெட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க்காண மெய்யாய் விளங்கும்
விழியாற்காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தெனதுள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை அதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத்தடுத் தாட்கொள்ள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனாபதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுத னே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

**நீலமயில் வீற்றிருக்கும் நேசன் திருவருளால்**
**ஞாலம் சிறக்கும் நனி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோ
சக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித்தாக
வுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவை கொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற் சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக் கென்று கூடுங்கொ
லோவுளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறை தோய்ந்த
கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவி சொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற்பனமு மவதானமுங்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்வாய்
நளி னாசனஞ் சேர்
செல்விக் கரிதன் றொருகால
முஞ்சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராம் மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலத்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம் புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரு மென்
பண்கண்ட ளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TELEPHONE DIRECTORY

## Telephone Numbers

**Sri Lanka Telephone, Jaffna**

| | |
|---|---|
| RTOM | 0212222231 |
| OPMC | 0212223061 |
| BILLING | 0212222241 |
| FAULT | 021222 2243 |
| | 021222 2211 |

**School Numbers**

| | |
|---|---|
| Jaffna Hindu College | 0212222431 |
| Chundikuli Girl's College | 0212222338 |
| Jaffna Central College | 0212222184 |
| Chavakachcheri Hindu College | 0212227640 |
| Jaffna Hindu Ladies College | 0212222346 |
| Jaffnd Hindu Primary School | 0212222119 |
| Hardy College | 0212223292 |
| Jaffna College, Vaddukoddai | 0602212531 |
| Kokuvil Hindu College | 0212222646 |
| Karaveddy Vickneshwara College | 0212223138 |
| Kopay Cristian College | 0212226840 |
| Manipay Hindu Ladies College | 0212222788 |
| Nelliyady Central College | 0212223017 |
| Royal College | 0112695256 |
| Ramanathan Hindu Ladies College | 0112581140 |
| St. John's Bosco | 0212222540 |
| St. John's College | 0212222432 |
| St. Patrics College | 0212222388 |
| St. James M.V | 0212223422 |
| Vernbady Girl's College | 0212222187 |
| T/ Hindu College | 0212222424 |
| Uduvil Girl's College | 0212223300 |
| Vaithiswara College | 0212223322 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Victoria College | 0212225405 |
| Vavtiiiiya Maha Vidyalayam | 0242222424 |
| Colombo Vivehanantha College | 0212431120 |
| Stanley College | 0212223456 |

***Banks Numbers***

| | |
|---|---|
| Bank of Ceylon, Stanly Road | 0212222759 |
| Bank oF Ceylon, Super grade | 0212222636 |
| Bank of Ceylon, Area Manager | 0212222735 |
| Bank of Ceylon, Manipay | 0212222603 |
| Bank oF Ceylon, Hospital Road | 0212223126 |
| Bank of Ceylon, K.K.S Branch | 0212222182 |
| Commercial Bank | 0212222176 |
| Commercial Bank of Ceylon | 0212223148 |
| Hatton National Bank | 0212222787 |
| Hatton National Bank, Hospital Road. | 0212223194 |
| National Saving Bank | 0212222696 |
| People's Bank Regional Manager, Kannathiddy | 021222 2956 |
| People's Bank, Stanly Road | 0212222698 |
| People's Bank, Kannathiddy | 0212222473 |
| People's Bank, Jaffna. | 0212222633 |
| People's Bank, University Branch. | 0212222072 |
| People's Bank, Palaly | 0212222247 |
| People's Bank, Zonal office | 0212222602 |

***Government Department***

| | |
|---|---|
| A.G.A Office Delft | 0212223314 |
| A. Technical Institution | 0212222595 |
| Asst Com of labour | 0212222375 |
| Asst Director National Youth service Council | 0212222526 |
| Assi. Director Dep. of Agriculture,Jaffna | 0212222379 |
| Asst. DireciorDep. Animal Production& Hcalth | 0212222387 |
| Asst. Director of Agncultare, Jaffna | 0212222379 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Asst. Commissioner Agrarian service, Jaffna | 0212222396 |
| Asst. Commissioner Co-operative Dev. | 0212222186 |
| Asst.Commissioner of Local Government | 0212222654 |
| Asst. Valuer | 0212222077 |
| Building Material Corporation | 0212222724 |
| Bursar University ofJaffna | 0212222644 |
| Blood Bank, Jaffna Teaching Hospital | 0212223063 |
| CEB Arasady Road, Jaffna | 0212222498 |
| CEB Chavakachcheri | 0212222216 |
| CEB Chunnakam | 0212223001 |
| Ceylon Petroleum Corporation | 0212222033 |
| Chest Clinic | 0212222494 |
| Construction Department | 0212222632 |
| Co - operative Council | 0212222324 |
| CWE (Sathosa) | 0212222344 |
| D.G.M Electricity Board | 0212222496 |
| Dept. of Technical Education & Training | 0212222358 |
| Deputy Post Master General | 0212222296 |
| Deputy Provincial Director of Health Service | 0212222278 |
| Cement corporation | 0212222239 |
| Director oFEducation | 0212222449 |
| Director Teaching Hospital | 0212223348 |
| District Surveyor office' | 0212222412 |
| Divisional Secretarial Jaffna | 0212222209 |
| Divisional Secretarial, Nallur | 0212222208 |
| Election Office | 0212222655 |
| Election OPS Room | 0212222227 |
| Employee Welfare Society Civil Affairs | 0212222628 |
| Ex. Engineer, RDA | 0212222590 |
| Ex. Engineer, RDA | 0212222580 |
| Govt. Farm School | 0212222174 |
| IndustrialDevelopment BoardN.H.D.Auilding | 0212222421 |
| Irrigation Engineer | 0212222288 |
| DCo-oprual Bank Union Ltd | 0212222639 |
| Jaffna District Agriculture Production | 0212222662 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Kachcheri-Accountant Jaffna | 0212222771 |
| Kachcheri, JaffnaG.A | 0212222355 |
| Kachcheri A. 0, Jaffna | 0212222775 |
| Kachcheri G.A Residence | 0212222205 |
| Kachcheri P.D Jaffna | 0212222774 |
| Librarian Universityof Jaffna | 0212222970 |
| Mayor Municipality, Nallur. | 021222 2744 |
| M.P.C.S,Jaffna | 0212222587 |
| M.P.C.S,Nallur | 0212222143 |
| Municipal Commissioner, Jaffna | 0212222275 |
| Municipal Council UDA | 0212223269 |
| Municipal Council Jaffna, Medical Officerof Health | 0212222645 |
| N.R.T.B Bus Stand | 0212222281 |
| N.R.T.B,Kondavil | 0212222207 |
| N.R. T.B, Point pedro | 0212222877 |
| NEP co - ordnating Office, Jaffna | 0212222643 |
| NHDA, Jaffna | 0212222039 |
| Nurses Training section. Hospital | 0212222736 |
| Piradeshiya Sabah, Nallur | 0212222530 |
| Piradeshiya Sabah, Vali South - West | 0212222689 |
| Piradeshiya Sabah, Vaukamam West | 0212222706 |
| Piradeshiya Sabah, Vali South WestManipay | 0212222681 |
| Post Office, faffna ColockTower Road. | 0212222708 |
| Post Office, Sub, Thirunelvely | 0212222265 |
| Post Office, Sub, Anaipanthi | 0212222251 |
| Post Office, Sub, Vannarpannai | 0212222253 |
| Post Office, Sub, Nallur | 0212222252 |
| Postoffice, Chundikuli | 0212222550 |
| Post Office,Kokuvil | 0212222750 |
| Post Office, Manipay | 0212222650 |
| Post Office, Velanai | 0212222533 |
| Post Office, Chavakachcheri | 0212222035 |
| Post Office, Division Supt., Kokuvil | 0212222594 |
| Post Office, DPGM Brown Road, Jaffna | 0212222160 |
| Post Office, DS Office | 0212222256 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| Post Office, RAO postal Dept. Jaffna | 0212222254 |
| Post Office. Sub, Anaikoddai | 0212222610 |
| Post Office, Sub, Bazzar, Jaffna | 0212222477 |
| Post Office, Urumpirai | 0212222447 |
| Road Development Department Jaffna | 0212222433 |
| Dean Faculty of Medicine | 0212222073 |
| Deadn Facultyof Science | 0212222685 |
| Dean Faculty of Agriculture | 0212222973 |
| Librarian | 0212222970 |
| Bursar | 0212222644 |
| Head, Dep of Anatomy | 0212223073 |
| Head, Dep. of Community Medicine | 0212222068 |
| Head, Obstetrics and Gynecology | 0212222545 |
| Ramanathan Academy of fine Arts (RAFA) | 0702212495 |
| Sidda Medicine | 0702212483 |
| Exchange (To all Departments) | 0212222483 |

***N.G.O's***

| | |
|---|---|
| CARE International | 0212222428 |
| CEYNOR Foundation Ltd | 0212222733 |
| Director, Christiadn Family Service Center | 0212222855 |
| FOURT | 0212222177 |
| GTZ, Temple Road | 0212222203 |
| GTZ Jaffna | 0212222238 |
| GTZ,Kandy Road | 0212222635 |
| Gurunagar Fishing Development | 0212223083 |
| Human Rights Office | 0212223000 |
| I C.R. C, Temple Road | 0212222568 |
| ICRC | 0212222026 |
| Jaipur Foor programme | 0212222574 |
| MSF | 0212222274 |
| President Social Development Foundation | 0212223218 |
| Refugees Rehablitration Organization | 0212222416 |
| RRAN Banglow | 0212222135 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| RRAN | 0212222648 |
| Safe the Children Fund | 0212222237 |
| Savodaya District Office | 0212222351 |
| SLRC | 0212222561 |
| Thrift & credit Co-Po societies Union | 0212223131 |
| UNDP | 0212222277 |
| UNHCR | 0212222005 |
| UNICEF | 0212222276 |
| UNOPS | 0212223331 |
| YMHA | 0212223038 |

***News paper***

| | |
|---|---|
| Uthayan | 0212229933 / 0212229944 |
| Elanadu | 0212225107 |
| Valampuri | 0212223378 / 0212227644 |
| Thinakural | 0212222127 |
| Sudar Oli | 0114734401-6 |
| Teaching Hospital | 0212222261 |
| Blood Bank | 0212223063 |

***University of Jaffna***

| | |
|---|---|
| Vice Chancellor Office | 0212222294 |
| Vice Chancellor Fax | 0212222294 |
| Vice Chancellor Resi | 0212222322 |
| Registrar Office | 0212222006 |
| Fax | 0212222006 |
| Dean Faculty of Arts | 0212223091 |
| Jaffna teaching Hospital | 0212222261 |
| Nursing home - Thirunelvely | 0212222263 |
| Holy cross | 0212222512 |
| Apolo Hospital | 0212223305 |
| S-amp-anthar Clinic | 0212227259 |
| Nadanamurug-anDispensary | 0212223635 |
| Public Library- Jaffna | 0212222019 |
| Electricity Board-Jaffna | 0212222498 |
| Fine brigade of Jaffna | 0212223556 |
| Kachcheri of Jaffna | 0212222235 |
| Police station of Jaffna | 0212222222 |
| Court of Jaffna | 0212222026 |
| Kathady Elders home | 0602213526 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்



எமது இல்லத் தலைவி

**அமரர். தியாகராசா**

**இராசேஸ்வரி** அவர்களின்

இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு துயரமதில் பங்கு கொண்டவருக்கும், தொலை பேசி, தந்தி மூலம் துயரமதை தெரிவித் தோருக்கும் மற்றும் இன்னோரன்ன பல உதவிகளைப் புரிந்த அனைவருக்கும், அந்தியேட்டி, சபிண்டீகரணம் முதலான ஆத்ம சாந்திக் கிரிகைகளில் பங்கு கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அயலவர்கள் ஆகியோர் க்கும் இம்மலரை அழகுற அச்சிட்டுத் தந்த கரிகணன் பிறிண்டேர்ஸ் நிறுவனத்தினருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

**இராசபவனம்,**
**மஞ்சத்தடி,**
**இணுவில்.**

**இங்ஙனம்**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையாதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



Harikanan Printers, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org